தொகுப்பு இல. 21 இதழ். 1

கொழும்பு இறையியல் கல்லூரி

தை 2025

# INFORMATION



## ஊக்குவிப்பின் ஊழியமும் திருச்சபை வளர்ச்சியின் இரண்டாவது அலையும்?

"ஊக்குவிப்பினாலேயே நாம் வாழ்கிறோம், அது இல்லாமல் நாம் மெதுவாக, துக்கத்தோடு, கோபத்தோடு மரணமடைகிறோம்" - (செலஸ்ட் ஹோல்ம்)

"ஊக்குவிப்பு ஆத்துமாவிற்கான பிராணவாயு (ஜார்ஜ் ஆடம்)

அதிபரின் சிந்தனையிலிருந்து




தனது நகைச்சுவையான வார்த்தைகளால் புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளரான மார்க் ட்வைன் ஒருமுறை "ஒரு சிறந்த பாராட்டுதலினால் என்னால் இரண்டு மாதங்கள் வாழ முடியும்" என்று கூறினார். ஊக்கமளிக்கும் ஒரு வார்த்தை அல்லது செயலானது ஒருபோதும் மறக்கப்பட மாட்டாது. தொட்டிலிலிருந்து கல்லறை வரை, நாம் ஊக்குவிப்பிற்காக ஏங்குகிறோம். துரதிஷ்டவசமாக, ஊக்குவிப்பு என்பது நாம் எளிதாக அளிக்கக்கூடிய ஒரு பரிசாக காணப்பட்டாலும், அதை ஒருசிலரே தமது வாழ்வில் ஒரு பழக்கமாக பகிர்ந்து கொள்கிறார்கள். பலர் சிந்திப்பதைப்போல ஊக்குவிப்பு என்பது நமது வாழ்க்கைப்பயணத்திற்கு அப்பாற்பட்ட விடயமல்ல. மாறாக, அது வாழ்க்கைக்கு அவசியமானதொன்றாகும். மேலும், ஊக்குவிப்பு காணப்படுகிற இடமெல்லாம், சந்தேகத்திற்கு இடமின்றி அங்குள்ள மக்களிலும், சமூகங்களிலும் வலுவான மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சி காணப்படும்.

முதலாவது தலைமுறை கிறிஸ்தவர்கள் யூதேயாவிலிருந்து சிதறடிக்கப்பட்டபோது, சிலர் வடக்கே 100 மைல் தொலைவில் உள்ள அந்தியோகியாவிற்கு பயணித்தனர். மிகவும் ஆர்வமுள்ள சுவிசேஷகர்களாக போகிற வழியில் தாங்கள் சந்தித்த அனைவரிடமும் அதிலும் குறிப்பாக பெரும்பான்மையான புறஜாதிகள் மத்தியில் சுவிசேஷத்தை பகிர்ந்து கொண்டனர். லூக்காவும்கூட "பெருமளவிலான" புறஜாதியினர் கர்த்தரிடத்தில் மனந்திரும்பியதாக பதிவு செய்கிறார். இதை நான் அந்தியோகியாவில் உள்ள திருத்தூதுப்பணி திருச்சபையின் முக்கிய கதையில் திருச்சபை வளர்ச்சியின் முதல் அலை என்று நினைக்கிறேன் (அப்போஸ்தலர் 11:19-21).

ஆனால் இரண்டாவது அலையும் காணப்பட்டது - இதற்காக திருச்சபையானது இன்னொரு பக்கத்திலிருந்து இரண்டாவது நகர்வினை ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

பெருமளவிலான புறஜாதியினர் விசுவாசிகளாகி கர்த்தரிடத்தில் திரும்பியதை எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டபோது, தாங்கள் ஒரு முக்கியமான தீர்மானத்தினை எடுக்க வேண்டும் என்பதை உணர்தனர். ஏனெனில், யூத பின்னணியிலிருந்து வந்த எவருக்கும் வரலாற்று ரீதியில் இவர்கள் "புறஜாதியினர்" என்பதாகவே காணப்பட்டனர்.

[மேலும் வாசிப்பதற்கு](#)

## பாடநெறி வழிகாட்டி 2025

## இலங்கை கிறிஸ்தவர்களின் அடையாளம்

2025 பாடநெறி வழிகாட்டியின் அட்டைப்படமானது இலங்கை கிறிஸ்தவர் ஒருவரின் கைரேகையை அடையாளமாக சித்தரிக்கிறது. எல்லைக்கோட்டினாலான இலங்கையை மையமாக கொண்டு அதனை சுற்றி காணப்படுகிற முகடுகளும் பள்ளத்தாக்குகளும் நம்மை கிறிஸ்துவைப்போல இருப்பதற்கு அழைக்கும் வேதாகம வசனங்களை பிரதிநிதித்துப்படுத்துகிறது, இப்படத்திற்கு பின்னணியில் உபயோகிக்கப்பட்டிருக்கிற நிறங்கள் இலங்கை தேசத்தின் தேசியக்கொடியின் நிறங்களை பிரதிபலிக்கிறது. கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வியானது மாணவர்களின் பரிபூரண உருவாக்கத்தினை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கலாச்சாரத்தின் செழுமையான பாரம்பரியத்திற்குள் தலை, இதயம் மற்றும் கைகள் போன்றவற்றை மாற்றியமைக்கிறது. அட்டைப் படம், இலங்கை கிறிஸ்தவர்களாக தேவனால் தரப்பட்ட தனித்துவமான அடையாளத்தின் முழுமைக்குள் வளருவதற்கான அழைப்பினை பிரதிபலிக்கிறதாக அட்டைப்படமானது காணப்படுகிறது.




[Click Here](#) ஆங்கிலம், சிங்களம், தமிழ் பாடநெறி வழிகாட்டிகளை அணுகுவதற்கு இங்கு அழுத்தவும்.

# கிழக்கு மாகாண கற்கை பாடத்திட்டத்தின் 10-வது ஆண்டு நிறைவுவிழா

மட்டக்களப்பு, ஐப்பசி 2024: கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்துவுக்கொப்பான தலைவர்களை உருவாக்குவதில் 10 ஆண்டுகளை நிறைவு செய்ததை கொண்டாடும் வகையில், அப்பகுதியை சேர்ந்த மாணவர்கள், நிறுவன அலுவலகர்கள், கல்விப்பீடத்தினர் மற்றும் போதகர்கள் விசேட ஆராதனை மற்றும் ஐக்கியவேளைக்காக ஒன்று கூடினர். இந்நிகழ்வானது கிழக்கு மாகாணத்தில் உள்ள திருச்சபை தலைவர்களுக்கு கொழும்பு இறையியல் கல்லூரியின் ஊழியத்தினை பற்றியும், கிழக்கில் திருச்சபைகளை வலுப்படுத்துவதற்கு எவ்விதமாக பங்காற்றுவது என்பதை பற்றியும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியது.


மாகாண கற்கைகளின் முகாமையாளர், இராஜாராம் ஹரிஹரன்


கிழக்கு மாகாண பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளர், அருள்மேரி ஜேக்கப்



மாணவர்கள் வழிநடத்திய ஆராதனைப்பாடல் மூலம் துதி மற்றும் நன்றியறிதல் வேளை.




கொழும்பு இறையியல் கல்லூரியில் பெற்றுக்கொண்ட கல்வியானது எவ்வாறு அவர்களின் வாழ்க்கை மற்றும் ஊழியங்களை மாற்றியது என்பதை குறித்து மாணவர்கள் பலம் வாய்ந்த சாட்சியங்களை பகிர்ந்து கொண்டனர்.


மட்டக்களப்பு கல்வி நிலையத்தில் உள்ள மாணவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் கல்விப்பீடத்தினர்.

## நன்றியுள்ள சேவையின் மைல்கற்களை அடையாளப்படுத்தல்

# கொழும்பு இறையியல் கல்லூரி வெளியீட்டுப்பிரிவு


Prof Somaratne






இறையியல் கல்வியினை ஆதரிப்பதற்கு இன்றைய சூழலுக்கு பொருத்தமான வளங்களை உருவாக்குவதற்கு ஏற்பட்ட உடனடி தேவையிலிருந்து கொழும்பு இறையியல் கல்லூரி வெளியீட்டுப்பிரிவானது உதித்தது. இத்தரிசனத்தின் முதற்கனிகளாக 2001-ம் ஆண்டில் பேராசிரியர் ஜி.பி.வி. சோமரத்ன அவர்களினால் எழுதப்பட்ட சிங்களமொழி இறையியல் அகராதியை வெளியிட்டது.

இன்று, கொழும்பு இறையியல் கல்லூரியின் வெளியீட்டுப்பிரிவானது, இறையியல் கலைக்களஞ்சியம், மற்றும் விளக்கவுரைகள், வரலாறு, பிரங்கவியல், கற்பித்தல் மற்றும் ஆராதனைப்பாடல்கள் மற்றும் வளங்களை தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் சொந்த படைப்பாகவும், மொழிபெயர்ப்பு வளங்களாக தற்போது வரையிலும் 140 தலைப்புகளில் உருவாக்கி வெளியிட்டுள்ளது.

இன்று, கொழும்பு இறையியல் கல்லூரியின் வெளியீடுகளானது, அதற்கு உரித்தான புத்தக நிலையத்திலும், முன்னணி புத்தக கடைகளிலும் மற்றும் இணைய வர்த்தக வலைத்தளங்களினூடாகவும் கிடைக்கப்பெறுகின்றன.




<u>30 வருட பயணத்தின் மைல் கற்கள்</u>







## கொழும்பு இறையியல் கல்லூரியின் வருட இறுதி கொண்டாட்டம் 2024

மார்கழி 6, 2024: உணவு, இசை மற்றும் ஐக்கியத்துடன் நிறைந்த மகிழ்ச்சியான மாலைவேளைக்காக கொழும்பு இறையியல் கல்லூரியின் மாணவர்கள், கல்வீப்பீடத்தினர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தமது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் ஒன்றுகூடினர். அலுவலக பணியாளர்கள் மற்றும் கல்விப்பீடத்தினரின் சிறப்பு விருந்தினர் நிகழ்வுகளுடன் மாணவர்களால் வழிநடத்தப்பட்ட நேரலை இசைக்குழு மாலைவேளைக்கான மனநிலையை ரம்மியமாக்கியது. மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, 30-வது வருட நிறைவு கொண்டாட்டங்களை மகிழ்ச்சிகரமான நிறைவிற்கு கொண்டு வந்தது.











## கொழும்பு இறையியல் கல்லூரியின் உலக திருப்பணிகளுக்கான ஜெப வாரம்

2024, கார்த்திகை மாதத்தில் வருடாந்த உலக திருப்பபணிகளுக்கான ஜெப வாரம் நடைபெற்றது. இலங்கையிலும், அதற்கு அப்பாலும் கிறிஸ்துவின் மாபெரும் கட்டளையை நாம் பின்பற்றும்போது தொடர்ந்து ஜெபிப்பதற்கான. புதிய உற்சாகத்தை சமுதாயத்திற்குள் உருவாக்கியது. இலங்கை, கொழும்பு இறையியல் கல்லூரி, இலங்கை திருச்சபைகள் மற்றும் உலகம் ஆகியவற்றிற்காக ஜெபிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.








## அஜித் பெர்ணான்டோவுடன் ஒரு இனிய சந்திப்பு

ஊழியம் மற்றும் வாழ்க்கையை குறித்து அஜித் பெர்ணான்டோ அவர்களுடன் முகமுகமாக சந்தித்து உரையாடும் மகிழ்ச்சியான விசேட வாய்ப்பினை மாணவர்கள் 2024, ஐப்பசியில் பெற்றிருந்தனர்.

மூத்த மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ தலைவர்களை சந்திக்கும் வாய்ப்பானது கொழும்பு இறையியல் கல்லூரியின் ஆவிக்குரிய உருவாக்க திட்டத்தின் ஒரு பகுதியாக காணப்படுகிறது.

விசேட கருத்தரங்கு

## “சிறார் மற்றும் வாலிபரின் மனநல ஆரோக்கியம்”

சிறார் மற்றும் வாலிபரின் மனநல ஆரோக்கியம் தொடர்பில் தமிழ் மொழியில் ஒரு விசேட கருத்தரங்கானது நடைபெற்றது. இக்கருத்தரங்கானது அனுபவம் மிக்க சிறுவர் மற்றும் இளம்பராயத்தவருக்கான உளவியல் வல்லுனரும், மனவள ஆலோசகருமான நிவேதிதா ஜீவபாலன் அவர்களால் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கு 2024, கார்த்திகை மாதம் கொழும்பு இறையியல் கல்லூரியின் வடகொழும்பு கல்வி நிலையத்தில் நடைபெற்றது.






ஆய்வரங்கு

## “இந்த யுகத்தின் கடவுள்’ யார்?

முனைவர். ஐவோ பூபாலன் அவர்கள் தமது முனைவர்பட்ட ஆய்வுக்கட்டுரைக்காக 2கொரிந்தியர் 4:4-ல் பவுல் குறிப்பிட்டுள்ள “இப்பிரபஞ்சத்தின் தேவன்” என்ற சொற்றொடரின் பொருளானது மீளாய்வு செய்யப்பட வேண்டுமென வாதிடும் அவரின் ஆய்வினை முன்வைத்த ஆய்வரங்கு நிகழ்வானது 2024 கார்த்திகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வெவ்வேறு திருச்சபை பிரிவுகள் மற்றும் அமைப்புகளின் தலைவர்கள், வேதாகம மொழிபெயர்ப்பு குழுவின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து சுவாரஸ்யமான கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் ஈடுபட்டனர். இறுதியாக வண. சைமன் ஃபுல்லர் (எமது கல்லூரியின் முன்னாள் முதல்வர்) அவர்களின் இவ்வாதத்திற்கு வழங்கிய முடிவுரையுடன் நிகழ்வானது நிறைவடைந்தது.








வாழ்த்துக்கள்

## இலங்கை, நாற்சதுர சுவிசேஷ திருச்சபையின் புதிய தலைவராக வண. ரொமேஷ் புளத்சிங்கள, எம்.டி., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு இறையியல் கல்லூரி செயற்குழுவின் உபதலைவரான வண.ரொமேஷ் புளத்சிங்கள, எம்.டி, அவர்கள் இலங்கை, நாற்சதுர சுவிசேஷ திருச்சபையின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் இந்த பொறுப்பை வண.லெஸ்லி கீகலுக்கு (கொழும்பு இறையியல் கல்லூரியின் ஸ்தாபக உறுப்பினர்) பின்பதாக ஏற்றுக்கொள்கிறார். புதிய பதவிக்கான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டதையிட்டு, வண.ரொமேஷ் அவர்களை உங்கள் ஜெபங்களில் நினைவுகூருங்கள்.

## நினைவஞ்சலி | மூப்பர் யூ சன் அஹ்ன்

கொழும்பு இறையியல் கல்லூரியின் 30 ஆண்டு கால சேவையில், நீண்டகால நண்பராக நிலைத்திருந்த மூப்பர் யூ சன் அஹ்ன் தை மாத நடுப்பகுதியில் காலமானார். இவர், வண.குவோனுடன் இணைந்து, இலங்கையிலுள்ள கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இறையியல் கல்லூரிக்கு ஜெபம் மற்றும் கொடுத்தலின் மூலம் ஆதரிப்பதற்கு உறுதியளித்த தென்கொரிய விசுவாசிகளின் வலையமைப்பிற்கு தலைமை தாங்கியவராவார். அனைத்து சூழ்நிலைகளிலும் “கொரியாவின் உதவி திருப்பணியின்” ஆதரவளிப்பானது இன்றுவரை நீடித்து காணப்படுகிறது. கடந்த வருடத்தில் சியோலில் (இடமிருந்து வலமாக) வண. குவோன், போல் ஷின் மற்றும மூப்பரான அஹ்ன் ஆகியோருடன் ஐக்கியவேளையை பகிர்ந்துகொள்ள கிடைத்ததானது கொழும்பு இறையியல் கல்லூரியின் முதல்வர் ஐவோ பூபாலன் அவர்களுக்கு ஒரு விசேஷித்த தருணமாக இருந்தது. மூப்பர் அஹ்னுக்காக நாம் ஆண்டவருக்கு நன்றி கூறுகிற அதேவேளை, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தெரிவிப்பதோடு, அவர்களுக்காக நாம் ஜெபிக்கிறோம்.



## கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு:

**1 வங்கி பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு பணபரிமாற்றம் (அமெரிக்க டொலர் மற்றும் கனேடிய டொலர்)**

மேலதிக தகவல்களுக்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**2 கடனட்டை மூலமாக**

**கொழும்பு இறையியல் கல்லூரியின் இணையத்தளத்தில் கட்டணம் செலுத்தும் வலைவாசல் மூலமாக பணத்தினை பரிமாற்றம் செய்யலாம்**

www.cts.lkஎன்ற எமது இணையத்தளத்திற்கு செல்லுங்கள்

முகப்பு பக்கத்தில் மேல் வலதுபுறத்தில் உள்ள கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு என்ற (Give to CTS) பொத்தானை அழுத்துங்கள்

உங்கள் நன்கொடையை செலுத்துங்கள்

**4 நேரடி பணக்கொடுப்பனவுகள்**

நேரடியாக கொஹுவலையிலுள்ள எமது கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமை காரியாலயத்திற்கு வருகை தரவும்.

**3 காசோலைகள்**

கொழும்பு இறையியல் கல்லூரி என **பெயரிட்டு** (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிட்டு), அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுணு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு **அனுப்பி வைக்கவும்**.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: வள மேம்பாட்டு முகாமையாளர், ரொஷல் ஹேக்கல்-ரணசிங்க**
+94 77 350 2930 | rochelle@cts.lk